தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி **ombudsmanlocal@tn.gov.in**
இணையதள முகவரி **www.tnlbo.tn.gov.in**

**முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண் 266/மா/2023**
**நாள்11.11.2024**

திரு.M.S. சிவசுப்ரமணியன்,
சென்னை–62. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை–62, திருமுல்லைவாயில், செந்தில் நகர், வ.உ.சி. தெரு, அண்ணா கலையரங்க வளாகத்தில் இயங்கும் செந்தில் நகர் பொதுநல மன்றத்தின் தலைவர் திரு. M.S. சிவசுப்ரமணியன் என்பவரின் 31.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.08.2023–ல் பெறப்பட்டு, 266/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–62, திருமுல்லைவாயில், செந்தில் நகர், வ.உ.சி. தெரு, அண்ணா கலையரங்க வளாகத்தில் இயங்கும் செந்தில் நகர் பொதுநல மன்றத்தின் தலைவர் திரு. M.S. சிவசுப்ரமணியன் என்பவர் தனது 31.07.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமம், மண்டலம் 11–ல் அமைந்துள்ள சோழம்பேடு–சோழபுரம் சாலையானது, கிழக்கே அம்பத்தூரையும், மேற்கே திருமுல்லைவாயில், மற்றும் ஆவடியையும் இணைக்கும் முக்கிய சாலையாக விளங்கி வருகிறது. சென்னை–திருவள்ளூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும்போது, வாகனப்போக்குவரத்தை இச்சாலை வழியாக திருப்பிவிடப்படும் புறவழிச்சாலையாகவும் முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. 80 அடி அகலமுள்ள இந்த பாதையானது முற்றிலும் அமைக்கப்படாமல் குறுகிய அளவுடைய சாலையாக தற்போது இருப்பதால் தினசரி கடும் போக்குவரத்து நெருக்கடி பகுதியாக மாறியுள்ளது. இந்நிலையில் அராபத் ஏரியை ஒட்டி மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை, ஆவடி மாநகராட்சி துவக்கியுள்ளது. இப்பணி வரவேற்கக்கூடியதே. ஆயினும், கால்வாய் புறம்போக்கு நிலத்தில் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பை பயன்படுத்தாமல், சாலை விரிவாக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பின் மையப்பகுதியில் கால்வாய் தோண்டப்படுகிறது. இது, பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வாக இருப்பதால், பாரம்பரியமிக்க எங்கள் செந்தில் நகர் பொதுநல மன்றமும், இப்பகுதிவாழ் பொதுமக்களும் ஆட்சேபனையை எழுப்பி வருகின்றனர்.

ஏற்கனவே கால்வாய் நில ஆக்கிரமிப்பு குறித்து சென்னை உயர்நீதிமன்ற அமர்வு, வழக்கு எண். W.P. No. 4024/2026 நாள். 04.02.2016–ல் வழங்கிய தீர்ப்புரையை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம். மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை மாநகராட்சி அலுவலர்கள் எவரும் மேற்பார்வையிடாத நிலையில், ஒப்பந்ததாரரின் விருப்பு வெறுப்பின் அடிப்படையிலும், ஆக்கிரமிப்பாளர்களின் தலையீட்டின்படியும் வடிகால் சீராக அமைக்கப்படாதது கடும் ஆட்சேபனைக்குரியதாகவும், அரசுக்கு அவப்பெயரை பெற்றுத்தருவதாகவும் உள்ளது.

எனவே, உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம், அருள்கூர்ந்து இதில் தலையிட்டு, கால்வாய் புறம்போக்கு நிலத்தில் வடிகால் அமைக்கும் பணியை வடபுறம் ஓரமாக செய்யுமாறும், சாலைக்கான நிலப்பரப்பில் கட்டுமான பணி ஏதும் செய்தல் கூடாது எனவும் அறிவுறுத்தி உரிய ஆணை வழங்கி உதவுமாறு பணிவன்போடு வேண்டுகிறோம். பொதுமக்களின் நலம் சார்ந்த அக்கரையால் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 11.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.**

**3)** இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 14.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 14.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

"சென்னை, ஆவடி திருமுல்லைவாயில் அராபத் ஏரியையொட்டி மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை ஆவடி மாநகராட்சி துவக்கியுள்ளது. கால்வாயை அமைக்கும்போது தனியர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை பயன்படுத்தாமல் அதாவது அங்குள்ள இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள குடிசைகளை அகற்றி மேற்கண்ட பணியை மேற்கொள்ளாமல் சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் மையப் பகுதியில் கால்வாய் தோண்டப்படுகிறது. மேற்கண்ட மழைநீர் வடிகால் பணியை ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் யாரும் மேற்பார்வையிடாததால், ஒப்பந்ததாரரின் விருப்பப்படி மேற்கண்ட மழைநீர் வடிகால் பணி சீராக அமைக்கப்படவில்லை. இதனால் அங்கு போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே மேற்கண்ட கால்வாய் கட்டுமானப்பணியை சாலைக்கான இடத்தில் மேற்கொள்ளாமல் அங்குள்ள குடிசைகளை அகற்றி அக்கால்வாய்ப்பணியை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) ஆவடி மாநகராட்சி இளநிலைப்பொறியாளர் 14.12.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருமுல்லைவாயில் சோழம்பேடு–சோழபுரம் பிரதான சாலை அராபத் ஏரியையொட்டியுள்ள பகுதியில் ரூபாய் 3.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 950 மீட்டர் நீளம் மற்றும் 2.40 மீட்டர் அகலமும் மற்றும் உயரம் 3 இடங்களில் முறையே 1.60, 1.80 மற்றும் 2.10 மீட்டர் அளவிலும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் அராபத் முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில்வரை சிறிய அளவில் சேதமடைந்த கால்வாய் அமைப்பாக இருந்த அதே இடத்தில் தொடங்கப்பட்டு, சுமார் 68 சதவீத அளவிற்கு வடிகால்வாய் கட்டுமானம் முடிவுற்றுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றத்தில் மேலும் விவரங்களை

அளித்திட மாநகராட்சி ஆணையரின் அறிவுரைப்படி கால அவகாசம் அளிக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) ஆவடி மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளரை 19.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு 14.12.2023 நாளிட்ட அழைப்பாணை மூலம் அறிவுறுத்தப்பட்டதால் அவரும், ஆவடி மாநகராட்சி உதவி செயற்பொறியாளரும் 19.12.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:-**

"கடந்த ஆண்டுகளில் திருமுல்லைவாயில் சோழம்பேடு பகுதியில் கணபதி நகர் மற்றும் அருகாமையில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் புகுந்ததன் அடிப்படையில் அவசர அவசியம் கருதி மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவடி திருமுல்லைவாயில் அராபத் ஏரியையொட்டி மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் அங்குள்ள சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாலையின் மையப்பகுதியில் எவ்விதப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அம்மையப்பகுதியில் எந்த இடத்திலும் பள்ளம் தோண்டப்படவில்லை.

ஆவடி அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில் வரை பழைய சிறிய அளவிலான சேதமடைந்த கால்வாய் அமைந்து இருந்த அதே இடத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித இடைஞ்சலுமின்றி மொத்தம் 2.40 மீட்டர் அகலத்தில் வடிகால்வாயின் உயரம் மூன்று இடங்களில் 1.60, 1.80 மற்றும் 2.10 மீட்டரிலும் ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வடிகால்வாய் கட்டுமானப் பணிகள் 68 சதவீத அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளால் தற்போது பெய்த மழை மற்றும் வெள்ள நீர் அம்பத்தூர் ஏரி உள்வாயில் சென்றது. இதனால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பாக எங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 19.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

**7) ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 19.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

"ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 2ல் வார்டு எண் 28ல் சோழம்பேடு பிரதான சாலை வடபுறம் அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி வரை (கணபதி நகர் வழியாக) மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதி 2023-2024ம் ஆண்டு நிதியின் கீழ் அமைக்கப்படும் மழைநீர் வடிகால்வாய் பணி தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தும், பணி ஏதும் செய்தல் கூடாது என தெரிவித்தும், புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதி 2023-2024ம் ஆண்டு நிதியின் கீழ் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 2ல் வார்டு எண் 28 அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணியை மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 367.00 இலட்சத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, முறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு திருவாளர் Mars Construction நிறுவனம், ஆவடி மூலம் பணி நடைபெற்று வருகிறது.

புகாரில் தெரிவிக்கப்பட்டவாறு, கால்வாய் புறம்போக்கு நிலத்தில் தனியார்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பை பயன்படுத்தாமல் சாலை விரிவாக்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் மைய பகுதியில் கால்வாய் தோண்டப்படுகிறது. இது பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் மிகப்பெரிய பாதிப்பாக இருக்குமென புகார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் தொடர்பாக கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில் வரை (கணபதி நகர் தெரு வழியாக) நகரளவை ஆவணங்களின்படியும் நில அளவர் திருமுல்லைவாயில் கிராமம், ஆவடி வட்டம், அவர்கள் ஒப்புகையிட்ட நகரளவை வரைப்படங்கள்படி நிலையில் இப்புகாரில் தெரிவித்தபடி தடைசெய்யப்பட்ட கால்வாய்/பாசன கால்வாய் புறம்போக்கு ஏதுமில்லை. மேலும் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, ஆவடி வட்டம், வார்டு டி.பிளாக் எண்.100, 101 மற்றும் 89 சர்வே எண்.28,33,5 மற்றும் 101ல் ரோடு வடப்புறம் பழைய கால்வாய் நிலையில் அமைந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் திருமுல்லைவாயில் சோழம்பேடு பகுதியில் கணபதி நகர் பகுதி மற்றும் இதர அருகாமையிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர்/வெள்ளநீர் புகுந்ததன் அடிப்படையிலும், பொது மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதித்த காரணத்தினாலும் மேற்கண்டவாறு அவசர அவசியம் கருதி மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் அமைக்க உத்தேசம் செய்யப்பட்டு அரசின் அங்கீகாரம் பெறப்பட்டு முறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில் வரை(கணபதி நகர் தெரு வழியாக) பழைய சிறிய அளவிலான சேதமடைந்த கால்வாய் அமைப்பு இருந்து வந்த அதே இடத்திலேயே பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித பாதிப்பின்றி தற்காலிக ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்திய இட பகுதியிலேயே மதிப்பீட்டின்படி நீளம் 950.00 மீட்டர் மற்றும் வடிகால்வாயின் நீர் செல்லும் வழிபாதை அகலம் 2.00 மீட்டர் (vent) Body Wall thickness இருபுறமும் 0.20 மீட்டர் அளவிலும் ஆகமொத்தம் 2.40 மீட்டர் அகலத்திலும், மேலும் வடிகால்வாயின் உயரம் மூன்று இடங்களில் 1.60,1.80 மற்றும் 2.10 மீட்டரிலும் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது ஏற்பட்ட மிக்ஜாம் புயல், மழை கூடுதலான மழைப்பொழிவு நிகழ்ந்த பொழுது எந்தவித பாதிப்பும் பொதுமக்களுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், வடிகால்வாய் கட்டுமானம் 68 சதவீத அளவிற்கு பணிகள் முடிவுபெற்றுள்ளது. மேலும் தொடர்ந்து பணி செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும் இரண்டு இடங்களில் Missing Link உள்ள பகுதிகளில் பழைய சிறிய அளவிலான கால்வாய் அமைப்பிலேயே வெள்ள நீர் அம்பத்தூர் ஏரி உள்வாயில் (inlet) சென்றது. இதனால் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

நகரளவை ஆவணங்களின்படி சாலை, தெரு, வண்டி பாட்டை, வண்டிபாதை என்கின்ற அமைப்பு தான் உள்ளதே தவிர தடைசெய்யப்பட்ட பாசன புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. பொது பயன்பாடு கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்கொண்டதன் அடிப்படையில் புகாரினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி இளநிலைப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

"சென்னை, ஆவடி திருமுல்லைவாயில் அராபத் ஏரியையொட்டி மழைநீர் கால்வாயை அமைக்கும்போது தனியர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை பயன்படுத்தாமல் அதாவது அங்குள்ள இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள குடிசைகளை அகற்றி மேற்கண்ட பணியை மேற்கொள்ளாமல் சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் மையப்

பகுதியில் கால்வாய் தோண்டப்படுகிறது. இதனால் அங்கு போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். எனவே அங்குள்ள குடிசைகளை அகற்றி அக்கால்வாய்ப்பணியை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில் வரை (கணபதி நகர் தெரு வழியாக) நகரளவை ஆவணங்களின்படியும் நில அளவர் திருமுல்லைவாயில் கிராமம், ஆவடி வட்டம், அவர்கள் ஒப்புகையிட்ட நகரளவை வரைப்படங்கள்படி நிலையில் இப்புகாரில் தெரிவித்தபடி தடைசெய்யப்பட்ட கால்வாய்/பாசன கால்வாய் புறம்போக்கு ஏதுமில்லை. மேலும் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, ஆவடி வட்டம், வார்டு டி.பிளாக் எண்.100, 101 மற்றும் 89 சர்வே எண்.28,33,5 மற்றும் 101ல் ரோடு வடப்புறம் பழைய கால்வாய் நிலையில் அமைந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் திருமுல்லைவாயில் சோழம்பேடு பகுதியில் கணபதி நகர் பகுதி மற்றும் இதர அருகாமையிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர்/வெள்ளநீர் புகுந்ததன் அடிப்படையிலும், பொது மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதித்த காரணத்தினாலும் மேற்கண்டவாறு அவசர அவசியம் கருதி மாநில பேரிடர் வெள்ள தடுப்பு நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் பணி நடைபெற்று வருகிறது.

அராபத் ஏரி முதல் அம்பத்தூர் ஏரி உள்வாயில் வரை(கணபதி நகர் தெரு வழியாக) பழைய சிறிய அளவிலான சேதமடைந்த கால்வாய் அமைப்பு இருந்து வந்த அதே இடத்திலேயே பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித பாதிப்பின்றி தற்காலிக ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்திய இட பகுதியிலேயே மதிப்பீட்டின்படி நீளம் 950.00 மீட்டர் மற்றும் வடிகால்வாயின் நீர் செல்லும் வழிபாதை அகலம் 2.00 மீட்டர் (vent) Body Wall thickness இருபுறமும் 0.20 மீட்டர் அளவிலும் ஆகமொத்தம் 2.40 மீட்டர் அகலத்திலும், மேலும் வடிகால்வாயின் உயரம் மூன்று இடங்களில் 1.60,1.80 மற்றும் 2.10 மீட்டரிலும் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது ஏற்பட்ட மிக்ஜாம் புயல், மழை கூடுதலான மழைப்பொழிவு நிகழ்ந்த பொழுது எந்தவித பாதிப்பும் பொதுமக்களுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், வடிகால்வாய் கட்டுமானம் 68 சதவீத அளவிற்கு பணிகள் முடிவுபெற்றுள்ளது. மேலும் தொடர்ந்து பணி செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும் இரண்டு இடங்களில் Missing Link உள்ள பகுதிகளில் பழைய சிறிய அளவிலான கால்வாய் அமைப்பிலேயே வெள்ள நீர் அம்பத்தூர் ஏரி உள்வாயில் (inlet) சென்றது. இதனால் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. நகரளவை ஆவணங்களின்படி சாலை, தெரு, வண்டி பாட்டை, என்கின்ற அமைப்பு தான் உள்ளதே தவிர தடைசெய்யப்பட்ட பாசன புறம்போக்கு நிலம் ஏதுமில்லை என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்ட பொழுது இப்புகார் தொடர்பாக கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டதால் முறையீட்டு மனு எண்.266/மா/2023 தேதி 03.01.2024 கடிதம் மூலமாக தலைமையிடத்து தலைமைப் பொறியாளரின் அறிக்கையை அனுப்பிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார். இந்நிலையில் தலைமைப் பொறியாளரின் அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் பெற்று ஆவடி மாநகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் குறிப்பிட்டுள்ளது போல் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்வதுடன் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய் துறையின் மூலம் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகள் இருப்பின் அதனை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Thiru M.S.Siva Subramanian,
President,
Senthil Nagar Welfare Association,
Anna Auditorium Complex,
V.O.C. Street,
Senthil Nagar,
Thirumullaivoyal.
Chennai – 600 062.

2) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

12/11/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

12/11/24